**கதிர்காமம் பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கதிர்காமம் பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் 72 ஆம் இலக்க நாட்குறிப்பேட்டு பதிவு மூலம் தவறுதலாக திரண்ட நிதிக் கணக்கு ரூபா 2,868,666 வரவு வைக்கப்பட்டு வாகன நிறுத்துமிடக் கட்டணங்கள் ரூபா 2,858,666 செலவு வைக்கப்பட்டதால் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | 2020 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டிற்காக சபைக்கு கிடைத்த ரூபா 1,314,900 பெறுமதி உழவு இயந்திரத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | உழவு இயந்திரத்தின் பெறுமதி மூலதனமாக்குவதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டிற்காக ரூபா 415,047 ஆன செலவினத்திற்காக கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | ரூபா 415,047 ஆன தொகை கணக்கீடு செய்து சரிசெய்வதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (iv) | மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்த ரூபா 325,000 பெறுமதியான உழவு இயந்திரத்தின் டேலரின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | குறித்த கணக்கினை சரி செய்வதற்கு கணக்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (v) | மீளாய்வாண்டின் போது நிர்மாணங்களிற்காக செலவிடப்பட்ட ரூபா 147,000 மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | குறித்த கணக்கினை சரி செய்வதற்கு கணக்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (vi) | சபையின் முன்னாள் செயலாளருக்கு 2019 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக பதில் கடமை படிகளாக செலுத்தப்பட்டிருந்த மாகாண சபையிலிருந்து மீளளிப்பு செய்ய வேண்டிய ரூபா 109,376 தொகையை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | கொடுப்பனவு செய்த பணத்திற்காக கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்வதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 127,377,806 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகள் ரூபா 9,605,513 தொகையான நிலுவை வீதவரி தொடர்பான | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் | தொழில்துறை மதிப்பீட்டாளர்களின் அறிக்கைகளை விரைவாக பெற்றுக் கொள்ளுமாறும் நிலுவை |

| | | | |
|---|---|---|---|
| காலப்பகுப்பாய்வு அறிக்கைகளும் ரூபா 6,351,392 ஆன நிலுவை வியாபார நிலைய வாடகை தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தரப்பினர் தொடர்பான விபரங்கள் மற்றும் ரூபா 17,385,512 ஆன செலுத்த வேண்டிய 4 மீதிகள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு அறிக்கைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வாடகையை அறவிடுமாறும் காலப்பகுப்பாய்வு அறிக்கையை துரிதமாக வழங்குமாறும் விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்ளுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) 21(2) ஆம் பிரிவு | சபைக்குரிய வீதிகள் இனங்காணப்பட்டு வர்த்தமாயில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குரிய வீதிகள் இனங்காணப்பட்டு வருவதுடன் அது முடிவடைந்தவுடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) 24(1)(ஆ) பிரிவு | சபைக்குரிய வீதிகள் மற்றும் சிறு வீதிகளுக்காக விதீப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் வீதிகளை பதிவேடுகளுக்கு உட்படுத்துமாறு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (iii) 132 ஆம் பிரிவு | 2019 ஆம் ஆண்டிற்குரிய சபையின் பாதீட்டை | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை | விடயத்திற்குரிய அமைச்சரின் அங்கீகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறைவேற்றியதற்காக தனியார் ஹொட்டெலொன்றில் தேனீர் விருந்தொன்றுக்கு ரூபா 146,250 செலவிடப் பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | பெறப்படாமல் இருந்ததுடன் விலை விபரங்கள் கோரி உணவுகளை பெற்று கொடுப்பனவு செய்யப்பட்டதாக அறியத் தருகின்றேன் |
| (iv) | 158, 162 மற்றும் 163 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 9,605,513 நிலுவை ஆதனவரி அறவிடப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை ஆதன வரியை துரிதமாக அறவிடுவதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப் பட்ட 124 கட்டிட திட்டங்களுக்குரிய இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணம் பரீட்சிக்கப்பட்டு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். | கட்டிட உரிமையாளர்கள் கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தி இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,648,306 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,946,000 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019<br>சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019<br>சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018<br>சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018<br>சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,419,400 | 8,351,971 | 4,925,877 | 3,426,094 | 8,119,400 | 8,274,133 | 4,851,519 | 3,422,614 |
| (ii) | வாடகை | 16,208,600 | 8,019,092 | 7,817,362 | 201,730 | 14,440,900 | 11,975,699 | 11,859,098 | 116,601 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 951,500 | 1,682,450 | 1,682,450 | - | 967,600 | 1,374,100 | 1,374,100 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 26,848,232 | 26,293,678 | 19,124,918 | 7,168,760 | 19,827,100 | 22,088,007 | 14,189,350 | 7,898,657 |
| | மொத்தம் | 54,427,732 | 44,347,191 | 33,550,607 | 10,796,584 | 43,355,000 | 43,711,939 | 32,274,067 | 11,437,872 |

## 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 6,210,807 தொகையான ஆதனவரி வருமானத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,426,094 தொகை சேகரிக்கப்படாமல் இருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 55 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை வீதவரியை துரிதமாக அறவிடுமாறும் அது தொடர்பான அறிக்கை ஒன்றை தருமாறும் விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 7,259,127 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 6,179,419 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. அறவிடப்படாத தொகை ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ஆதன வரியில் 85 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை வீதவரியை துரிதமாக அறவிடுமாறும் அது தொடர்பான அறிக்கை ஒன்றை தருமாறும் விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

(ஆ) <u>நிலுவை ஆதன வரி</u>

| | | |
|---|---|---|
| சபைக்குரிய ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 6,413,306 ஆன மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 831,828 வரி அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை ஆதன வரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | அனைத்து நிலுவை ஆதன வரிகளை அறவிடுவதற்கு விடயத்திற்குரிய உத்தியோ கத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,338,751 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 3,211,992 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட்டுள்ளது என அறியதருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் | 2015 திசெம்பர் 07 ஆந் திகதிய 1994/22 ஆம் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 7 விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்படவில்லை. | விதிக்கப்பட வேண்டும். | இலக்க IV (ஆ) உள்ளூராட்சி மன்ற வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 23 உப விதிகளை பின்பற்றியுள்ளதாக அறியதருகின்றேன் |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆண்டில் அடைந்து கொள்வதற்கு தேவையான நோக்கங்கள் மற்றும் அமுல்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை எனவும் 2020 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | குறிகாட்டிகளை இனங்கண்டு வருவதாகவும் அது தொடர்பாக அறிக்யொன்றை வழங்குமாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) பெறவேண்டிய கணக்குகள்** | | |
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 1,604,560 தொகையான நிலுவை பொது வியாபார சந்தை நிலைய மற்றம் நிலுவை கடை வாடகை என்பன அறவிடப்படாதிருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைஎடுக்க வேண்டும். | வாடகை அறவிட வேண்டிய தரப்பினரை இனங்கண்டு காலப்பகுப்பாவினை தயாரித்து அறவிடுவதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி ரூபா 4,319,539 தொகையை மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி துரிதமாக தீர்த்து வைக்குமாறு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 03 பதவிகளுக்குரிய 18 ஊழியர்களும் 13 பதவிகளுக்குரிய 26 வெற்றிடங்களும் காணப்பட்டன. | மிகை பதவிகள் அங்கீகரித்துக் கொள்ள வேண்டியதுடன் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | மிகை பதவிகளுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வெற்றிடங்கள் நிரப்பு வதற்கு தேவையான அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் ஆட்சேர்ப்பு 2019 நவம்பர் 20 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை மூலம் நிறுத்தப் |

பட்டுள்ளதாக அறிய தருகின்றேன்.

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| <u>கடை வாடகை மதிப்பீடு</u><br>சபையினால் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 200 கடைகளின் மாதந்த வாடகையை அறவிடும் போது ஊவா மற்றும் கிழக்கு மாகாண பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபை நிதியத்திற்கு ரூபா 23,542,350 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பிடப்பட்ட வாடகையை அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் சட்டரீதியான உரித்து கையேற்கப்படாமை<br>2001 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிடைக்கப் பெற்றிருந்த வாகனங்கள் 06 இயந்திரங்களின் சட்டரீதியான உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களின் சட்டரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | உரித்து கையேற்கப்பதற்கு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| **(ஆ) மதிப்பீடு மற்றும் பூர்த்தி அறிக்கை தயாரிக்காமை**<br>சபைக்குச் சொந்தமான 2 இயந்திரங்கள் 2019 சனவரி 01 ஆந் திகதி முதல் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 718.3 மீற்றர் மணித்தியாலங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 119 | மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கைகளை தயாரிக்குமாறு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்டு ரூபா 549,313 ஆன எரிபொருள் செலவின மொன்று மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(இ) நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் தயாரித்தல்** | | |
| சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் இயந்திரங்கள் 2019 பெப்ரவரி 18 ஆந் திகதி முதல் ஆகஸ்ட் 31 ஆந் திகதிவரை காலப்பகுதியில் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு ரூபா 608,162 செலவிடப்பட்டு 5715 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அக்காலப்பகுதிக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் எழுதப்பட்டிருக்கவில்லை. | ஓட்டக் குறிப்புக்கள் காலரீதியில் தயாரிக்கப்பட வேண்டும். | ஓட்டக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஈ) சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் முறையே 4 ஆண்டுகள் மற்றும் 13 ஆண்டு களாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அவற்றை 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாவனையிலிருந்து அகற்றிய வாகனங்களை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விடயத்திற்குரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வாளர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டதுடன், எதிர்வரும் நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியதருகின்றேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட வேண்டும். | 2020 சனவரி மாதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். |